# நரி



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com www.tamilacademy.com


# நரி

ஆதிகாலம் தொடங்கி இக்காலம் வரை மனிதனின் உற்ற நண்பனாக நாய்கள் இருக்கின்றன. நாய்கள் போன்ற ஒத்த அமைப்பைக் கொண்ட விலங்குகளை நீங்கள் அறிந்ததுண்டா? அவை தந்திரத்திற்குப் புகழ் பெற்றவை என்று சொல்லும் போதே தெரிந்து இருக்கும் அது நரி என்று. நாய்கள் பற்றி தெரிந்த நமக்கு நரிகள் பற்றி தெரிய வாய்ப்பில்லை. ஆனால் நம்முடைய உவமைகள் மட்டும் நரியைப் பற்றி இருக்கும். குறிப்பாக "அவன் நரிப்பயல்", "இவன் பனங்காட்டு நரி", "நரி தந்திரம் செய்கிறான்" என்று நாம் சொல்லுகிறோம். இப்படி உவமைகளுக்கு உதவுகின்ற நரியின் வாழ்க்கையை இங்கு காண்போம்.



நரிகள், நாய் பேரினத்தைச் சார்ந்த பாலுட்டி விலங்கு ஆகும். தனது உருவில் ஓநாயைக் காட்டிலும் நரி சிறியது. நரிகள் உயரமான மலைகள், பாலைவனங்கள், பனிபடர்ந்த பெரிய மலைப்பகுதி, சமவெளிகள் என அனைத்து இடங்களிலும் காணப்படுகின்றன. ஆனால் அண்டார்டிக்காவில் மட்டும் காணப்படுவதில்லை. பெரும்பான்மையான நாடுகளில் நரி என்றும் மேற்கத்திய நாடுகளில் செந்நரிகள் என்றும் பொதுவாக அறியப்படுகின்றன. நரிகள் சில சிறு கூட்டமா காணப்படும். மிக அரிதாக பெரும் கூட்டமாகவும் காணப்படுவதுண்டு. வயதான நரிகள் தனித்துக் காணப்படும்.

நரி இனத்தில் பெரியது செந்நரி ஆகும். சிறியது பின்னிக் ஆகும். நரியின் உருவ அமைப்பு நீள் வாக்கில் ஆரம்பித்து புதர் மண்டிய வால் போன்ற அமைப்பைக் கொண்டு முடிகிறது. தட்டையான மண்டை, நிமிர்ந்த முக்கோண காதுகள், கூரான வளைந்த மூக்கு, நீண்ட அடர்த்தியான வால், நடுத்தர அளவினை விட சிறிய உடல் நரியின் அடையாளம் ஆகும். நாய் இனங்களைப் போல நரிகளுக்கும் 42 பற்கள் இருக்கின்றன. தாடைப்பகுதியில் வெட்டுப்பற்கள் 3/3, கோரைப் பற்கள் 1/1, முன்கடைவாய்பற்கள் 4/4, கடைவாய்பற்கள் 3/2 உள்ளன. தான் உண்ணும் உணவின் தசையை உரிக்க ஒரு ஜோடி கோரைப் பற்களும், மற்ற பற்கள் உணவினை மெல்வதற்கு பயன்படுகிறது. வவ்வால் காது நரிகளுக்கு மட்டும் கூடுதலாக 6 பற்கள் உள்ளன. நரிகளின் கால் பகுதி கருப்பாகவும், அதன் வாலின் நுனிப் பகுதியில் வெள்ளையாகவும் இருக்கும்.



அளவில் பெரிய செந்நரியின் எடை 4.1 மற்றும் 8.7 கிலோ வரை இருக்கும். சிறிய அளவான பின்னிக் நரியின் எடை 0.7 லிருந்து 1.6 கிலோ வரை இருக்கும். இவற்றில் ஆண் பெண் வேறுபாடு தெளிவாகக் காண முடியாது. இனப்பெருக்க உறுப்புகளைக் கொண்டு அவை ஆண், பெண் எனப் பிரிக்கப்படுகின்றன.



நரிகள் அனைத்துண்னி வகையைச் சார்ந்தது. பூச்சிகள், ஊர்வன, முதுகெலும்புள்ள சிறிய பறவைகள், இலைகள், கனிகள், நண்டுகள், முட்டைகள், தரை அணில்கள் ஆகியவற்றுடன் இறந்த விலங்குகளின் மாமிசத்தை உண்ணும். நரிகளுக்கு மோப்ப சக்தி அதிகம். எனவே பூமிக்கு அடியில் உள்ள எலிகளை தனது கால்களைக் கொண்டு தோண்டி, அதன் கழுத்துப்பகுதியைப் பிடித்துக் கொல்கிறது.

ஆர்டிக் நரி பனியில் வேட்டையாட தனது காது மற்றும் மோப்ப சக்தியை நம்பி இருக்கிறது. பனிக்கு அடியில் உள்ள விலங்கினைப் பிடிக்க நரி, குதித்து தனது முன்னங்கால்களை பனிக்குள் செலுத்தி தனது தலையை உள்ளே விட்டு இரையைப் பிடிக்கும். இவ் விலங்குகள் கூட்டமாகவோ அல்லது தனியாகவோ வேட்டையாடும். பொதுவாக நரிகள் தினமும் ஒரு கிலோ வரை உணவு உட்கொள்ளும். நரிகள் பூலோகத் தோட்டிகள் என்று அழைக்கப்படுகின்றன.



நரிகளின் இருப்பிடம் வாழும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாறுபடுகின்றன. பாலைவனத்தில் வாழும் நரிகள் தரையில் பொந்துகள் அமைத்து வாழும். மலைப்பகுதியில் வாழும் நரிகள் குகைகளிலும், தாழ்வான மரப்பொந்துகளிலும் வாழும். சமவெளிப் பகுதியில் வாழும் நரிகள் அடர்ந்த புதர்களின் நடுவிலும், பனிப் பிரதேச நரிகள் பனியில் குகை அமைத்து வாழும். இவற்றிக்கு எல்லை எதுவும் கிடையாது. சில சமயங்களில் தனது மலத்தின் மூலமாக எல்லையைக் குறிக்கும்.



உலகில் 27 வகையான நரி இனங்கள் இருப்பதாக கூறப்படுகிறது. 27 வகையான நரி இனங்கள் இருந்தாலும் அவற்றின் உணவு மற்றும் செயல்பாடுகள் ஒன்றுபட்டும், நிறம், அளவு மற்றும் வாழும் சூழ்நிலை வேறுபட்டும் காணப்படுகின்றன. 27 வகையான நரி இனத்தை 7 வகையான பேரினத்துக்குள் அடக்குவார்கள்.

| இனங்கள் | வகைகள் | எடை | அளவு | நிறம் | வாழும் இடம் |
|---|---|---|---|---|---|
| நாய் (canis) | எத்தியோபியின் ஓநாய் | ----- | ----- | ----- | இவ்வினம் தற்போது முற்றிலும் அழிந்து விட்டன |
| Credocyon | நண்டுஉண்ணும் நரி | 4.5 - 7.7 கிலோ | 64.3 செ.மீ | சாம்பல் | மித வெப்ப மண்டல காடுகள் |
| Dusicyon | ----- | ----- | ----- | ----- | முற்றிலும் அழிந்து விட்டன. |
| Lycalopex | Culpeo | 5 - 13 கிலோ | 95 - 142, வால் 44 செ.மீ | சிவப்பு கலந்த சாம்பல். | ஆண்டிஸ் மலைப்பகுதி தென் அமெரிக்கா |
| | டார்வின் நரி ( darwin's) | ---- | ---- | கரும் சாம்பல் | ஸ்பானிஷ், சிலி |
| | தென் அமெரிக்க சாம்பல் நரி ( south american gray) | 2 - 4 கிலோ | 42 - 68 செ.மீ. வால் 30 - 36 செ.மீ | சாம்பல் | அமெரிக்கா கனடா |
| | பாம்பாஸ் ( pampas ) | 2.4 - 8 கிலோ | 51 - 80 செ.மீ | வெள்ளை கலந்த சாம்பல் | தென் அமெரிக்கா |
| | Sechuran | 3 - 4.1 கிலோ | 53 - 59 செ.மீ. வால் 25 செ.மீ | சாம்பல் | தென் அமெரிக்கா |
| | கிழட்டு நரி ( hoary) | 2.7 - 4 கிலோ | 58 - 60 செ.மீ வால் 30 செ.மீ | சாம்பல் | தென் அமெரிக்கா |
| Otocyon | வவ்வால் காது நரி (bad - eared fox) | 3.2 - 5.4 கிலோ | 46 - 66 செ.மீ. வால் 23 - 34 செ.மீ | உடல் சாம்பல் நிறத்திலும், கால் மற்றும் காதுகள் கருப்பு நிறம் | ஆப்ரிக்கா |
| Urocyon | சாம்பல் நரி (gray fox) | 3.6 - 7 கிலோ | 76 - 112 செ.மீ வால் 27.5 - 44.3 செ.மீ | சாம்பல் | தென் அமெரிக்கா |
| | தீவு நரி (island fox ) | 1 - 2.8 கிலோ | 48 - 50 செ.மீ வால் 11 - 29 செ. மீ | சாம்பல் | கலிபோர்னியா |

| இனங்கள் | வகைகள் | எடை | அளவு | நிறம் | வாழும் இடம் |
|---|---|---|---|---|---|
| | Cozumel | | | | முற்றிலும் அழிந்து விட்டன |
| vulpes | ஆர்டிக் | 2.9 - 9.5 கிலோ | 46 - 68 செ.மீ வால் 30 செ.மீ | வெள்ளை | ஆர்டிக் |
| | வங்க நரி (bengal fox) | 3 - 4 கிலோ | 50 செ.மீ வால் 25 - 30 செ.மீ | பழுப்பு கலந்த சிவப்பு | இந்தியா, நேபாள், பாகிஸ்தான் |
| | கேப் நரி (cape fox) | 2.5 - 3.6 கிலோ | 94 செ.மீ | வெளிர் சாம்பல், வால் கருப்பு | ஜிம்பாவே |
| | Corsac fox | 1.6 - 3.2 கிலோ | 45 - 65 செ.மீ . வால் 19 - 35 செ.மீ | வெளிர் சாம்பல் கலந்த மஞ்சள் | போட்ஸ்வான |
| | Kit fox | 1.5 - 3 கிலோ | 38 - 52 செ.மீ வால் 22 - 33 செ.மீ | சாம்பல் | பாலைவன பகுதிகள் , மத்திய ஆசியா, ஆப்ரிக்கா |
| | வெளிர் நரி (Pale fox) | 2 - 3 கிலோ | 40 - 45 செ.மீ . வால் 25 - 36 செ.மீ | சாம்பல் கலந்த பழுப்பு | ஆப்ரிக்கா |
| | Ruppell's fox | 1 - 3.5 கிலோ | 40 - 52 செ.மீ. வால் 25 - 35 செ.மீ | வெள்ளை கலந்த சிவப்பு | வட ஆப்பிரிக்கா, ஆசியா |
| | சிவப்பு நரி ( red fox) | 2.2 - 14 கிலோ | 45 - 95 செ.மீ வால் 30 - 50 செ. மீ | சிவப்பு | ஆர்டிக் ,வட ஆப்பிரிக்கா , வட அமெரிக்கா ,யுரேசியா |
| | Swift fox | 2 - 4 கிலோ | 79 செ.மீ | சாம்பல் | அமெரிக்கா |
| | திபெத்திய நரி (tibietan nari) | 4 - 55 கிலோ | 60 - 70 செ.மீ. வால் 29 - 40 செ.மீ | பொன் நிறமான கருப்பு உடல் | நேபாளம், இந்தியா |

என வகைப்படுத்தப்படுகின்றன.

நரிகளின் வாழ்நாள் இயற்கையான சூழ்நிலையில் 4 ஆண்டுகளும், மனிதர்களால் வளர்க்கப்படும் நரிகள் 10 ஆண்டுகள் வரை உயிர் வாழ்கின்றன.



நரிகளின் சிறப்பு அவற்றின் பாதங்கள் உள் வாங்கி இருப்பதால் தரையில் அவற்றின் காலடித் தடங்கள் முழுவதுமாக படுவதில்லை. சாம்பல் நிற நரி மரம் ஏறும். சிங்கம், புலி, கரடி, நாய், மற்றும் மனிதர்கள் நரியின் கொன்றுண்ணிகள் ஆகும்.



நரிகள் ஆண்டுக்கு ஒரு முறை மட்டும் இணைசேருகின்றன. இவற்றின் இனப்பெருக்க காலம் டிசம்பர் முதல் பிப்ரவரி மாதம் வரை நடைபெறும். நரி 52–55 நாட்கள் கருவினை சுமக்கின்றன. அதன் பிறகு 4-5 குட்டிகளை ஈனுகின்றன. குட்டிகள் பெரியதாக வளரும் வரை தாயின் அரவணைப்பில் இருக்கின்றன. வயதான பெண் நரி சில சமயங்களில் 7 குட்டிகள் வரை ஈனும். நரி வாழ்நாள் முழுவதும் ஒரே துணையோடு மட்டுமே இருக்கும்.



நரிகள் கால நிலைக்கு ஏற்ப நிறம் மாறும் தன்மை உடையது. குட்டிகள் பிறக்கும் போது இளம் பழுப்பு அல்லது கருப்பு நிறத்தில் இருக்கும். சற்று வளர்ச்சியடைந்த பிறகு சாம்பல், சிவப்பு, வெள்ளை கலந்த நிறங்களிலும் காணப்படும். குளிர்காலத்தில் நரிகளின் நிறம் முற்றிலும் மாறுபடும். ஆர்டிக் நரிகள் குளிர் காலத்தில் தனது ரோமங்களை வெள்ளையாக மாற்றிக்கொள்ளும். அவற்றின் கால் பாதங்களில் ரோமங்கள் இருப்பதால், குளிரிலிருந்து தனது உடலைப் பாதுகாத்து கொள்கிறது.

தமிழில் நரியை ஓரி, கோமாயு, ஊளன், ஒண்டன், இகலன், சம்பு, பூரிமாயன், குரோட்டா, சிருகாலன் என்று அழைக்கபடுகின்றன.

காடுகளிலும், வயல் பகுதிகளிலும் அதிகமாக தென்பட்ட நரி இனங்கள் வாழ்விட சுருக்கம், உணவுத் தட்டுப்பாடு, காடுகளின் அழிவு காரணமாக மிகவும் குறைந்துவிட்டன. சில சமயங்களில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் போது அவை மனிதர்கள் வசிக்கும்

பகுதிக்குள் நுழைந்து, அவர்கள் வளர்ப்பு பிராணிகளை உணவாக்கிக் கொண்டு மனிதர்களைத் தாக்கத் தொடங்கி விடுகின்றன. இதனால் நரிகள் வேட்டையாடப்பட்டுக் கொல்லப்படுகின்றன. சிலர் நரிகளின் தோலுக்காகவும் வேடையாடுகின்றனர். மங்கோலிய பழங்குடி இன மக்கள் கழுகுகளின் மூலம் நரியை வேட்டையாடி அதன் மாமிசத்தை உணவாகப் பயன்படுத்துகின்றனர்.



அமெரிக்கா, ரஷ்யா, இங்கிலாந்து நாட்டில் வாழும் மக்கள் நரிகளைத் தங்களது வீட்டில் செல்லப்பிராணியாக வளக்கின்றனர். குறிப்பாக நரிகள் மனிதனின் வாழ்விட சூழலில் ஒத்துப் போவதால் மனிதர்களுடன் இணக்கமாகப் பழகுகின்றன. நரிகள் இந்திய மதிப்பில் சுமார் 35,000 இருந்து 50,000 வரை விற்பனை செய்யப்படுகிறது.

இயற்கையின் உணவு சங்கிலியில் நரிகள் மிக முக்கிய இடத்தில் உள்ளன. விவசாய நிலத்தை பாழ்படுத்தும் எலிகள், மயில், சிறிய பூச்சி இனங்களை இவை கட்டுப்படுத்துகின்றன. ஆனால் நரிகள் வேட்டையாடப்படுவதால் மேற்சொன்ன விலங்குகளின் எண்ணிக்கை அதிகரித்து உணவு உற்பத்தி பாதிக்கப்படுகிறது. எனவே நரிகளைக் காப்பாற்றுவது நம் கடமை ஆகும்.

***

நாய் பேரினத்தைச் சார்ந்தது தான் நரியினம்.
வீரத்தால் மட்டுமே வேட்டையாடி உணவைப் பெறும்
விலங்கிடமிருந்து தனது விவேகத்தைப்
பயன்படுத்தித் தனக்குத் தேவையான உணவைப்
பெற்று தன் வாழ்வை தகவமைத்துக் கொள்ளும்
தந்திர நரியினத்தின் வாழ்வியலை
அறிந்தோம் அல்லவா?

இனி நிலம் நீர் இரண்டிலும் வாழும்
உயிரினம் பற்றி அறிவோமா!
தவளை தானே! இல்லை
ஆமை! அதுவும் இல்லை
அது டைனோசரின் எச்ச உயிரினம்!
அறிய ஆவலா?...
அடுத்த நூலைப் படியுங்கள்!




செ.மெல்வின்ராஜா., M.A.,M.Phil.,B.Ed.,
[மொழி ஆய்வாளர்]

உடன் உலகத்தமிழ்க் கல்விக்கழக தமிழ் ஆசிரியர்கள்
மற்றும் வரைகலையாளர்கள்.



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com www.tamilacademy.com